**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )**
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**

Spl. S.C. No. 31/19

**நாள்: 10.07.2019 விசாரணை தொடங்கிய நேரம் : 11.35 மணி**

**அ.சா - 1 சித்ரா (அரசு தரப்பில் மறுமுதல் விசாரணை தொடர்ச்சி):**

என் மகன் கோகுல்ராஜ் பயன்படுத்தி வந்த செல்போனை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். என்னிடம் காட்டப்படும் சாபொ 8 செல்போன்தான் என் மகன் பயன்படுத்திய செல்போன்.

**1 முதல் 15 எதிரிகள் தரப்பில் மறுகுறுக்குவிசாரணை :**

நானும், என் இருமகன்களும், என் கணவரும் இந்து பறையர் வகுப்பை சேர்ந்தவர் என்று நான் என்னை போலீசார் விசாரித்த போதும், நாமக்கல் நீதிமன்றத்தில் விசாரித்தபோதும், உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாணபத்திரங்களிலும், புகாரிலும் சொல்லியிருக்கிறேன். நீதிமன்றத்தில் காண்பித்த சிசிடிவி படங்களை நானும் என் மகனும் டிவியில் பார்த்தோம். அதை வைத்துதான் நான் சொல்லுகிறேன் என்றால் என் மகனை எனக்கு தெரியும். கோவிலிலும், கோவிலைச் சுற்றியும் என்ன நடந்தது என்ற விவரம் சுவாதி சொல்லிதான் தெரியும். அவர் சொன்னதைவைத்துதான் நான் தெரிந்துகொண்டேன். உயர்நீதிமன்றத்தில் பிரமாணபத்திரத்தில் கோவிலிலும், கோவிலைச் சுற்றியும் நடந்த விவரங்களை சுவாதி சொன்ன விவரங்களின் அடிப்படையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான்.
(அரசுதரப்பு சிறப்பு வழக்கறிஞர் சாட்சி திருப்பி அழைக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட முதல் விசாரணையின் வரையறைக்கு எதிராக இருப்பதாக ஆட்சேபணை செய்ததன் பேரில் கீழ்கண்ட எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் கேள்விக்கான பதில் பதிவு செய்யப்பட்டது.)

நான் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாணபத்திரத்தில் (ஒ.பி 6030/19) பத்திரத்தில் பேரவை தலைவர் மற்றும் பேரவையை சேர்ந்த 16 பேர் ஆணவ கொலையாக என் மகன் கோகுல்ராஜை கொடூரமாக பொதுமக்கள் முன்னிலையில் திருச்செங்கோடு

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

அர்த்தநாரீஸ்வரர் மலைக்கோவில் அருகில் கொலை செய்து விட்டதாக சொல்லியிருக்கிறீர்களா?. சொல்லியிருக்கிறேன்.

இந்துகோவில்களுக்கு போயிருக்கிறேன். இந்து கோவில்களுக்கு நான்கு திசைகளிலும் நான்கு வாசல்கள் இருக்கும் என்றால் சரிதான்.

உங்களுடைய செல்போனுக்கு குறிப்பிட்ட அடையாளம் சொல்ல முடியுமா என்றால் 10 வருடமாக அந்த செல்போனைதான் பயன்படுத்திவருகிறேன். அதில் எல்லா செல்போன் நம்பரும் இருக்கிறது.

கோகுல்ராஜின் செல்போனுக்கு குறிப்பிட்ட அடையாளம் சொல்லமுடியுமா என்றால் தற்போது முதல் விசாரணை தொடர்ச்சியில் நீதிமன்றத்தில் பார்த்த செல்போன்தான். நீதிமன்றத்தில் பார்த்த செல்போனுக்கு குறிப்பிட்ட அடையாளம் சொல்ல முடியுமா என்றால் என் மகன் பயன்படுத்திய செல்போன் எனக்கு அடையாளம் தெரியும்.

என் மகன் எத்தனை செல்போன் வைத்திருந்தான் என்று தெரியாது. கடைசியாக இந்த செல்போன்தான் வைத்திருந்தான். கடைசியாக 23 ம் தேதி என் மகன் செல்போனை பயன்படுத்தும்போது பார்த்தேன். 23 ம் தேதி கடைசியாக எத்தனை மணிக்கு செல்போனை பார்த்தேன் என்றால் என்னால் நேரம் குறிப்பிட்டு சொல்லமுடியாது. 23 ம் தேதிக்கு பிறகு நீதிமன்றத்தில்தான் செல்போனை பார்த்தேன்.

நான் சொல்வதுபோல் செல்போன் நம்பர்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றாலும்,செல்போன்கள் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், சொல்லிக்கொடுத்தன்படி அடையாளம் காட்டுகிறேன் என்றாலும் சரியல்ல. அதைபோல் சிசிடிவி காட்சிகளையும் , சொல்லிக்கொடுத்தப்படி சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுமுதல் விசாரணை** : இல்லை

**விசாரணை முடிந்த நேரம் :** 12.28 பகல்

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

**DEPOSITION OF WITNESS**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**IN THE COURT OF THE III ADDL.DIST. & SESSIONS COURT(PCR), MADURAI.**
**DEPOSITION OF WITNESS FOR PROSECUTION / DEFENCE**
Spl. **SESSIONS CASE NO. 31 /19** **PW** 76

Name : கதிரேசன் விசாரணை ஆரம்பித்த நேரம் **:12.30 (**மதியம்**)**
Father's name : G. கருப்பன்
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the 10th July 2019.

**முதல் விசாரணை**

நான் ஓமலூர் சுகந்தம் நகர், சேலத்தில் குடியிருக்கிறேன். தற்போது சென்னையில் ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரிகிறேன். நான் திருச்செங்கோடு KSR கல்லூரியில் பி.இ படித்து இருக்கிறேன். 2014 ஆண்டு முதல் 2018 ஆண்டுவரை படித்தேன். நான் என் ஊரிலிருந்து திருச்செங்கோடில் உள்ள கல்லூரிக்கு காலேஜ் பஸ்ஸில் வருவேன். எனக்கு எங்கள் கல்லூரியில் படித்த கோகுல்ராஜை தெரியும். கோகுல் ராஜ் எனக்கு கல்லூரியில் 3 வருடம் சீனியர். கோகுல்ராஜ்ம் ஓமலூரிலிருந்து நான் வரும் பஸ்ஸில்தான் கல்லூரிக்கு வருவார். அந்த பஸ் ஓமலூரில் காலையில் 6.45 முதல் 6.50 மணிக்குள் புறப்பட்டு கல்லூரிக்கு 8.45 முதல் 8.50க்குள் வந்துவிடும். கல்லூரி முடிந்து மாலை 4.45 மணிக்கு கல்லூரியில் இருந்து புறப்பட்டு மாலை 6.20 முதல் 6.30 மணிக்கு ஓமலூருக்கு வரும். மாலையிலும் கோகுல்ராஜ் அதே பஸ்ஸில் ஓமலூருக்கு வருவார். 23 ம் தேதி 6 வது மாதம் 2015 அன்று காலை கல்லூரி பேருந்து கிளம்பியபோது 6.50 முதல்6.55 மணிக்கு பேருந்தில் ஏறினார். அப்போது அவர் கல்லூரி படிப்பு முடிந்து ஒரு மாதம் ஆகியிருந்தது. கல்லூரி முடிந்தபிறகு ஏன் வருகிறாய் என்று கேட்டதற்கு சுவாதி என்ற பெண்ணிடம் பணம் வாங்க வருவதாகவும், திருச்செங்கோடில் இறங்கிவிடுவேன் என்று சொன்னார். திருச்செங்கோட்டில் காலை 8.15 அல்லது 8.20 மணிக்கு இறங்கும்போது அவனை மீண்டும் எப்போது வருவாய் என்று கேட்டதற்கு அந்த பெண் கோயிலுக்கு

உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

வரச்சொல்லியிருக்கிறது என்றும் பணம் வாங்கிக்கொண்டு மாலை கல்லூரிக்கு வந்துவிடுவேன் என்று சொன்னார். திருச்செங்கோட்டில் ஓங்காளியம்மன் கோவில் திருப்பத்தில் இறங்கிக்கொண்டார். மாலை நான் கல்லூரி பேருந்தில் திரும்பி போனேன். ஆனால் கோகுல்ராஜ் வரவில்லை. நான் வீட்டிற்கு போனபிறகு இரவு 10 மணிக்கு கோகுல்ராஜின் அண்ணன் கலைச்செல்வன் என்னை போனில் கூப்பிட்டு, கோகுல் காலையில் காலேஜ்க்கு வந்தாரா என்று கேட்டார். காலேஜ்க்கு கோகுல்ராஜ் காலையில் என்னுடன் திருச்செங்கோடு வந்தார் என்றும் பிரெண்ட்டை பார்ப்பதற்கு திருச்செங்கோட்டில் இறங்கிவிட்டதாகவும் சொன்னேன். மாலை பஸ்ஸில் கோகுல்ராஜ் வந்தாரா என்று கேட்டதற்கு வரவில்லை என்று சொன்னேன். இரவு 11 மணிக்கு கலைச்செல்வன் என் வீட்டிற்கு வந்தார். அப்போதுதான் நான் சுவாதி என்ற பெண்ணிடம் பணம் வாங்க போவதாக சொல்லிவிட்டு இறங்கினார் என்று சொன்னேன். நான் கோகுல்ராஜ்க்கு நெருங்கிய நண்பர்களின் செல்போன் நம்பர்களை அவர் கேட்டதால் எழுதிக்கொடுத்தேன். மறுநாள் காலை நான் கலைச்செல்வனுக்கு போன் செய்து கோகுல் வந்துவிட்டரா என்று கேட்டேன். வரவில்லை என்று சொன்னார். கோகுலின் நண்பர் கார்த்திக் என்பவர் கலை என்பவரிடம் சொன்னதாக கலை என்னிடம் கோகுல்ராஜை கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று தகவல் சொன்னார். அன்று மாலை கோகுல்ராஜ் உடல் தலை தனியாகவும், உடல் தனியாகவும், ரயில்வே டிராக்கில் கிடப்பதாகவும் யுவராஜ் கேங் மர்டர் செய்துவிட்டதாகவும், கோகுல்ராஜின் அண்ணன் என்னிடம் சொன்னார். (எதிரிகள் தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையின் பேரில் மேற்கண்ட பதில் பதிவு செய்யப்பட்டது.)

சுவாதி KSR கல்லூரியில் கோகுல்ராஜ் உடன் படித்தார். கோகுல்ராஜ், சுவாதி ஆகியோர்களை படத்தில் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். கோகுல்ராஜையும், சுவாதியையும் நான் கல்லூரியில் பார்த்திருக்கிறேன். இருவரையும் ஒன்றாக பார்த்திருக்கிறேன்.

நீதிமன்றத்தில் திரையிட்டு காட்டப்பட்ட நீதிமன்ற சான்றாவணம் 1 சிடியில் CAM 1ல் நாள் 23.6.2015 நேரம் 10.52.54 நொடியில் திரையில் தோன்றிய ஒருவரையும், அவருடன் வந்த பெண்ணையும் சாட்சி அவர்கள்தான் கோகுல்ராஜ் மற்றும் சுவாதி என்று அடையாளம் காட்டினார்.

நீதிமன்றத்தில் திரையிட்டு காட்டப்பட்ட நீதிமன்ற சான்றாவணம் 1 சிடியில் CAM 5ல் நாள் 23.6.2015 நேரம் 10.55.26 நொடியில் திரையில் கம்பத்தின் அருகில் வந்த

UTL MEDIA
உள்ளாட்சித் தகவல்
www.ullatchithagaval.com

ஒருவரையும், அவருடன் வந்த பெண்ணையும் சாட்சி அவர்கள்தான் கோகுல்ராஜ் மற்றும் சுவாதி என்று அடையாளம் காட்டினார்.

நீதிமன்றத்தில் திரையிட்டு காட்டப்பட்ட நீதிமன்ற சான்றாவணம் 1 சிடியில் CAM 1ல் நாள் 23.6.2015 நேரம் 11.58.43 நொடியில் திரையில் தோன்றிய நபர்களில் வைலட் நிற சட்டை அணிந்து கோவிலுக்கு உள்ளே வரும் நபரை கோகுல்ராஜ் என்று சாட்சி அடையாளம் காட்டினார். சாட்சி திரையில் கண்ட நபர்களில் வைலட் நிற சட்டை அணிந்திருந்தவரை கோகுல்ராஜ் என்று தொட்டு அடையாளம் காட்டினார்.

இது தொடர்பாக சிபிசிஐடி போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை மதிய உணவு இடைவேளைக்காக 1.20 மணிக்கு நிறுத்திவைக்கப்பட்டது)**

**குறுக்கு விசாரணை ( 1 முதல் 15 எதிரிகள் தரப்பில்): விசாரணை தொடங்கிய நேரம் : 2.10 (மதியம்)**

24.9.2015 ம் தேதி இரவு 9 மணிக்கு என் வீட்டில் வைத்து சிபிசிஐடி போலீசார் என்னை முதன் முதலில் விசாரித்தார். அதுவரை நான் இந்த சம்பவம் பற்றி போலீசார் யாரிடமும் எதுவும் சொல்லிக்கொள்ளவில்லை. 23.6.2015ம் தேதி நான் கல்லூரிக்கு போனேன். 24.6.2015 அன்று நான் கல்லூரிக்கு போனேன். 25.6.2015 மற்றும் 26.6.2015 தேதிகளில் நான் கல்லூரிக்கு போகவில்லை. 2.7.2015 வரை ஒரு வாரம் நான் கல்லூரிக்கு செல்லவில்லை. 24.6.2015 முதல் 2.7.2015 வரை போலீசார் யாரும் என்னை விசாரிக்கவில்லை. 24.6.2015 முதல் 2.7.2015 வரையான காலத்தில் சித்ராவோ, கலைச்செல்வனோ, இறந்த கோகுல்ராஜின் நண்பர்களோ என்னை பார்த்தார்களா என்றால் பார்த்தார்கள். அவர்களிடம் எனக்கு தெரிந்த விசயங்களை சொன்னேன். அவர்களில் யாரும் என்னிடம் போலீசாரிடம் சொல்லவேண்டும் என்றோ காவல் நிலையத்திற்கு வரவேண்டும் என்றோ சொல்லவில்லை. கோகுல்ராஜின் அம்மா சித்ரா அசா1 என் பெரியம்மா என்றால் சரிதான். கோகுல்ராஜின் நண்பர்கள் மற்றும் அவருடன் நெருங்கி பழகியவர்களை எனக்கு தெரியும். அவருக்கு நெருங்கிய நண்பர் ஸ்ரீதர் என்றால் சரிதான். அவர் வன்னியரா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கும்போது கோகுல்ராஜின் நண்பர்கள் யார், யாருடன் அவர் பழகுவார் , பேசிக்கொள்வார் என்றும் கேட்டார்கள். அதைபோல் அவருக்கு காதலி உண்டா என்று கேட்டார்கள். கோகுல்ராஜின் நெருங்கிய நண்பரான ஸ்ரீதர் வுடன் பேசிக்கொண்டு வருவார் என்றும், நான் ஒரு வருடகாலமாக கோகுல்ராஜ் வுடன் பஸ்ஸில் போயிருக்கிறேன், பஸ்ஸின் முன்பகுதியில்

UTI MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

கேர்ள்ஸ் அமர்ந்திருப்பார்கள், கோகுல்ராஜ் யாரையாவது லவ் பண்ணினாரா என்று தெரியாது, கோகுல்ராஜ் வீடு அருகில் இருந்து லதா என்ற பெண்ணும் எங்கள் காலேஜில் எம்.சி.ஏ படித்து வந்தார் என்றும், அவரும் நான் போகிற காலேஜ் பஸ்ஸில் தான் வந்து போவார் என்றும், லதாவுடன் கோகுல்ராஜ் சகஜமாக பேசுவார் என்றும், இருவரும் நண்பர்கள் என்று கேள்விப்பட்டேன் என்றும் போலீசார் விசாரித்த போது நான் சொல்லவில்லை. கோகுல்ராஜ் கல்லூரியில் பெண்களுடன் பேசுவார். லதாவும் , அவர்களில் ஒருவரா என்றால் லதா யார் என்று தெரியாது. கோகுல்ராஜ் வீட்டருகில் வன்னியர் குலத்தை சேர்ந்த லதா என்ற பெண் வசிக்கிறரா என்று எனக்கு தெரியாது. சித்ரா என்னிடம் லதாவை பற்றி கேட்டதில்லை. நானும் சொன்னதில்லை. லதா என்ற பெண்ணை எனக்கு தெரியும் என்றாலும் லதாவிற்கும், கோகுல்ராஜிற்கும் இருந்த நெருங்கிய உறவு எனக்கு தெரியும் என்றாலும் வழக்கிற்காக மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. 25.6.2015 முதல் 2.7.2015 வரை போலீசார் என்னை சந்தேகத்தின் பேரில் வைத்திருந்தார்கள் என்றாலும் அதை நான் மறைக்கிறேன் என்றாலும் சரியல்ல. லதா வன்னியர் இனத்தை சேர்ந்தவர் என்பதால் அந்த இனத்தை சேர்ந்தகளுடைய நிர்பந்தத்தின் பேரில் இந்த வழக்கில் அவர்களுடைய செயல்பாடுகள் மறைக்கப்பட்டு விட்டது என்றால் சரியல்ல. சுவாதியை எனக்கு ஏற்கனவே தெரியும். போலீசார் விசாரிக்கும்போதே சுவாதியைப் பற்றி எனக்கு தெரியும். கல்லூரி பஸ் என்பது எங்கள் கல்லூரிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அந்த பஸ்சுக்கு டிரைவர் உண்டு, கண்டெக்டர் இல்லை. பேருந்து ஓமலூரில் மாணவர்களை ஏற்றிக்கொண்டு நேராக கல்லூரிக்குதான் செல்லும் என்றால் சரிதான். திருச்செங்கோட்டிலிருந்து 8 அல்லது 10 கிலோமீட்டர் தூரத்தில் கல்லூரி உள்ளது. எந்த திசையில் உள்ளது என்றால் தெரியாது. திருச்செங்கோட்டிலிருந்து ஓமலூர் 75 கிலோமீட்டர் தூரம் இருக்கும். கல்லூரியில் படிக்கும் மாணவர்கள்தான் அந்த பஸ்ஸில் பயணம் செய்ய முடியும் என்றால் சரிதான். கல்லூரியில் சேரும்போதே பணம் எங்களிடமிருந்து வசூலித்துவிடுவார்கள் என்றால் சரிதான். அவ்வாறு வசூலிக்கும் பணம் பஸ்ஸிற்கும் சேர்த்து என்றால் அவ்வாறு குறிப்பிடவில்லை. பஸ்ஸிற்கும் சேர்த்து வாங்கியிருக்கலாம். 23.6.2015 அன்று கோகுல்ராஜ் பஸ்ஸில் ஏறியபோது அவருக்கு படிப்பு முடிந்துவிட்டதே அவர் ஏன் வருகிறார் என்றுதான் அவரிடம் கேள்வி கேட்கப்பட்டது. நான் பஸ்ஸில் ஏறும் ஸ்டாப்பிற்கு பஸ் 6.30 மணிக்கே வந்துவிடும் என்றால் சரியல்ல. சுமாராக அந்த நிறுத்தத்தில் இரண்டு நிமிடம் பஸ்ஸை நிறுத்தி ஆட்களை ஏற்றிக்கொள்ளும். 23.6.2015 ம் தேதி காலை கல்லூரி பேருந்து கிளம்பியபோது 6.50, 6.55 மணிக்கு பேருந்தில் ஏறினார் என்றும், அப்போது அவர் கல்லூரி படிப்பு முடிந்து ஒரு மாதம் ஆகியிருந்தது என்றும், கல்லூரி முடிந்தபிறகு ஏன் வருகிறாய் என்று கேட்டதற்கு சுவாதி என்ற பெண்ணிடம் பணம் வாங்க வந்ததாகவும், திருச்செங்கோட்டில் இறங்கி விடுவேன் என்று சொன்னார் என்றும்,

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

திருச்செங்கோட்டில் காலை 8.15 மணிக்கு இறங்கும்போது அவரை மீண்டும் எப்போது வருவாய் என்று கேட்டதற்கு, அந்த பெண் கோவிலுக்கு வரச்சொல்லியிருக்கிறது என்றும், பணம் வாங்கிகொண்டு மாலை கல்லூரிக்கு வந்துவிடுவேன் என சொன்னார் என்றும், போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். போலீஸ் விசாரணையில் கோகுல்ராஜ் படித்துவருகிறார் என்று சொல்லவில்லை. கோகுல்ராஜ் அண்ணன் கலைச்செல்வன் இரவு 10 மணிக்கு போன் செய்து கேட்டபோது நான் சுவாதியைப் பற்றி அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை. போலீசார் விசாரிப்பதற்கு முன்பு கோகுல்ராஜ் அம்மா சித்ராவிடமோ, அண்ணன் கலைச்செல்வனிடமோ, சுவாதியைப் பற்றியோ, திருச்செங்கோடு கோவிலைப் பற்றியோ நான் சொல்லவில்லை. 24.06.2015 ம் தேதி மதியம் 12.45 அல்லது 1.00 மணிக்கு கோகுல்ராஜின் அண்ணன் கலைச்செல்வனிடம் கன்பார்ம் பண்ணினேன். கன்பார்ம் பண்ணுதல் என்றால் என்ன என்று தெரியாது. கன்பார்ம் பண்ணுதல் என்பது உறுதிப்படுத்துதல். கலைச்செல்வன் என்னிடம் கோகுல்ராஜ் அந்த பெண்ணுடன் போனதாக அந்த பெண் சொன்னதாக கலைச்செல்வன் சொன்னார். அதை நான் ஆம் என்று உறுதிப்படுத்தினேன். 24.06.2015 ம் தேதி மதியம் 12.45 முதல் 1.00 மணிக்குள் உறுதிப்படுத்தினேன். என்னுடைய கல்லூரியில் வைத்து சொன்னேன். என் கல்லூரியில் மதிய உணவு நேரம் என்பது 12.20 முதல் 1.30 மணிவரை ஆகும். கோகுல்ராஜீம், சுவாதியும் ஒன்றாக கோவிலுக்கு சென்றதை அல்லது வெளியில் சென்றதை நான் பார்த்திருக்கிறேனா என்றால், கல்லூரியில் ஒன்றாக போனதை பார்த்திருக்கிறேன். கோவிலுக்கு, வெளியிடங்களில் ஒன்றாக போனதை பார்க்கவில்லை. 23.06.2015 ம் தேதி கோகுல்ராஜும், சுவாதியும் கோவிலுக்கு போனார்கள் என்று சுவாதி சொன்னதாக கலைச்செல்வன் என்னிடம் சொன்னதை நான் கன்பார்ம் செய்தேன். 23.06.2015 அன்று கோல்ராஜும் , சுவாதியும் ஒன்றாக கோவிலுக்கு போனதை நான் பார்க்கவில்லை. நான் கோகுல்ராஜ் சொன்னதை வைத்து கன்பார்ம் செய்தேன். பின்பு இரவு 11 மணிக்கு கலைச்செல்வன் வீட்டிற்கு வந்தார் எனவும், அப்போது நான் சுவாதி என்ற பெண்ணிடம் பணம் வாங்க போனதாக சொல்லி இறங்கி சென்றார் என்று சொன்னேன் என போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. கோகுல்ராஜின் நெருங்கிய நண்பர்களின் செல்போன் நம்பர்களை அவர் கேட்டார் என்றும், நான் எழுதிக்கொடுத்தேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொன்னேன். மறுநாள் காலை நான் கலைச்செல்வனுக்கு போன் செய்து கோகுல் வந்துவிட்டரா என்று கேட்டேன். வரவில்லை என்று சொன்னார் என்றும் கோகுலின் நண்பர் கார்த்திக் என்பவர் கலை என்பவரிடம் சொன்னதாக கலை என்னிடம் கோகுல்ராஜை கடத்திக்கொண்டு போய்விட்டார்கள் என்று தகவல் சொன்னார் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. அன்று மாலை கோகுல்ராஜ் தலை தனியாகவும், உடல் தனியாகவும் இரயில்வே டிராக்கில் கிடப்பதாகவும், யுவராஜ் கேங் மர்டர்

UTL INDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com

செய்துவிட்டதாகவும், கோகுல்ராஜின் அண்ணன் என்னிடம் சொன்னார் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. கோகுல்ராஜின் அண்ணன் உடல் தனியாகவும் இரயில்வே டிராக்கில் கிடப்பதாகவும், யுவராஜ் கேங் மர்டர் செய்துவிட்டதாகவும், என்னிடம் சொன்னபோது இரவு 7.30 அல்லது 8.00 மணி இருக்கும். சுவாதி KSR கல்லூரியில் கோகுல்ராஜ் உடன் படித்தார் என்றும் கோகுல்ராஜ், சுவாதி ஆகியோர்களை படத்தில் பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும் என்றும் கோகுல்ராஜையும், சுவாதியையும் நான் கல்லூரியில் பார்த்திருக்கிறேன் என்றும் இருவரையும் ஒன்றாக பார்த்திருக்கிறேன் என்றும் நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை. சுவாதி என்ற பெயரையே நான் போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சுவாதியை எனக்கு தெரியவே தெரியாது என்றாலும், எனக்கு சொல்லிக்கொடுத்து, போட்டோவில் காண்பித்து, நான் சிசிடிவியில் அடையாளம் காண்பித்தேன் என்றாலும் சரியல்ல. சிசிடிவி பதிவுகளை முதன்முதலில் இப்போதுதான் பார்க்கிறேனா என்றால் டிவி நியூஸ்ஸில் பார்த்திருக்கிறேன். 25.6.2015 , அல்லது 26.06.2015 ம் தேதியில் டிவியில் பார்த்திருக்கலாம். அதன்பிறகு இப்போதுதான் பார்க்கிறேன். கோகுல்ராஜ் வைலட் நிற சட்டை அணிந்திருந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். சிசிடிவி படங்களையும், புகைப்படங்களையும் எனக்கு காண்பித்தன் அடிப்படையில் நான் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. கோகுல்ராஜை 23.06.2015 ம் தேதி பஸ்ஸில் பார்த்ததன் அடிப்படையில் தான் மற்ற விவரங்களை தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். நான் சொன்ன தேதியில், நேரத்தில், கோகுல்ராஜை நான் பார்த்திருக்கமுடியாது, பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என்னை சந்தேகத்தின் பேரில் போலீசார் விசாரணையில் வைத்திருந்தார்கள் என்றாலும், என்னை காப்பாற்றிக் கொள்ளவும், மற்றவர்களை காப்பாற்றவும் சொல்லிக்கொடுத்தப்படி சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுமுதல் விசாரணை (அரசுதரப்பில்)</u>

போலீசார் என்னை விசாரித்தார்களா , சிபிசிஐடி என்னை விசாரித்தார்களா என்றால் , சிபிசிஐடி என்னை விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை:** இல்லை

**விசாரணை முடிந்த நேரம் : 3.20 மணி**

UTL MEDIA
உள்ளாட்சித்தகவல்
www.ullatchithagaval.com